உ.

சிவமயம்.

குஹப்ரஹ்மணேநம :

திருச்சிற்றம்பலம்.

# திருப்பா.

## கடவுள் வணக்கம்.

*பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பா**ராதி யைம்பூத மல்லாத தாயண்ட
பகிரண்ட மூலமான
பரவிந்து பரநாத நிலையைக் கடந்தரும்
பாவன வரூபவிரிவே
நாராக நிற்குமா மாயையை யகன்றதாய்
நாப்பணடி யீறற்றதாய்
நானென தெனாநெறிச் செல்வர்கம் பீரமாய்
நந்தறிரி பில்லாததாய்
நேராய வுவமான வுவமேய நீத்ததாய்
நின்மல வசங்கநபமாய்
நித்தபரி பூரண வகண்டதத் துவஞான
நிட்டையில் விளங்குநிலவாய்த்
தாராள மாய்முதிய முதனூ லிரண்டுமொரு
சம்மதங் கொண்டுமுடிவிற்
சாற்றுநற் சச்சிதா னந்தமா யுள்ளசிவ
சாமியைச் சிந்தைசெய்வாம். 1

**ப**ன்மதத் தொறுவெலா மறுதியிட் டறைதரும்
பலபேத தெய்வமாகிப்
பகரும மதங்கட் கதீதநிலை யாகியொரு
பரிசின்றி நிகழ்வதாகிப்

புன்மதி யணுக்களூறழ் வுக்குறழ்வ தாகியெதிர்
போக்குவர வற்றதாகிப்
புகலரிய வண்டகோ டித்திரள்க ளைத்தனது
பூர்த்திநில வருள்வெளியிலே
வன்மையொடு வதியவைத் தைந்தொழிலு மவ்வருளின்
வலியா னடத்தியுனலும்
மறதியு மிலாதமலி சூனிய சிதாகாச
வத்துவா யனவரதமும்
என்மனசி லுள்ளகுரு தெய்வமா யெக்காலு
மேசற்ற வின்பமாகி
எங்குநிறை வாயவிர் குகப்பிரம மென்பதை
யெணாதெணி யிறைஞ்சல்செய்வாம். 2

**தூ**ர்த்தகுண முள்ளவிப சாரிநடை யென்னவொரு
துறையின் றனந்ததெய்வந்
தொழுவழு வுறாதொருவ னுடலிலொரு சீவனே
தோய்ந்துநின் றிடுநீர்மைபோற்
சீர்த்தியுக மெங்கணும் பூர்த்திநிதி யாகவே
சின்மய வியோமவடிவாத்
திகழகண் டாகார சத்யசை தன்யபர
தெய்வத்தை யுய்யுமெல்லா
மூர்த்திகளு மேத்துபரி பக்குவங் கண்டவர்கண்
முன்னுமா றருளுமறிவின்
மூலமுத லைப்பொருவில் வைதிகசை வத்துழை
முதற்கடவு ளாயபொருளை
வார்த்தைமன தாலள விடற்கொணா வத்துவித
வாசா மகோசரத்தை
மாசற்ற சுத்தசிவ சுப்பிரமணி யத்தைநாம்
வந்தித்து வாழ்த்திவாழ்வாம். 3